வேலை வாங்கி தருவதாக பாஜ நிர்வாகி பணமோசடி

சிவகங்கை, ஜூலை 11: நெய்வேலி என்எல்சி நிறுவனத்தில் வேலை வாங்கி தருவதாக பணம் மோசடி செய்த பாஜ நிர்வாகி மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி கழனிவாசல் பகுதியை சேர்ந்தவர் கோபால் (66). இவர், தன்னுடைய மருமகளுக்கு நெய்வேலியில் உள்ள என்எல்சி நிறுவனத்தில் வேலை வாங்கி தருவதற்காக சிவகங்கை சேர்ந்த பாஜ ஓபிசி அணி மாநில பொறுப்பாளராக உள்ள ராஜேந்திரனை அணுகினார். அவரிடம் கடந்த 2018ம் ஆண்டு ரூ.20 லட்சத்து 49ஆயிரம் கொடுத்துள்ளார். ஆனால் ராஜேந்திரன் கூறியபடி வேலை வாங்கி கொடுக்க வில்லை.

அதன் பின்னர் அவர் வாங்கிய பணத்தில் ரூ.15 லட்சத்து 75 ஆயிரத்தை திருப்பி கொடுத்துள்ளார். மீதி தொகை ரூ.4 லட்சத்து 74 ஆயிரத்தை கொடுக்க வில்லை. இதுகுறித்து கோபால் பலமுறை கேட்டும் பணம் கொடுக்காததால், சிவகங்கையில் உள்ள ஜேஎம் 2 கோர்ட்டில் புகார் கொடுத்தார். கோர்ட் உத்தரவின்படி, ராஜேந்திரன் மீது மாவட்ட குற்றப்பிரிவு போலீஸ் இன்ஸ்பெக்டர் சங்கீதா வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

திருப்புத்தூர் அருகே மணல் கடத்திய 3 பேர் கைது

திருப்புத்தூர், ஜூலை 11: திருப்புத்தூர் அருகே சரக்கு வேனில் மணல் கடத்திய மூன்று பேரை போலீசார் கைது செய்தனர். மேலும் அவர்களிடம் இருந்து 50 சாக்கு மூட்டை மணல்கள் மற்றும் வேன் பறிமுதல் செய்யப்பட்டது. திருக்கோஷ்டியூர் காவல் நிலைய எஸ்.ஐ சத்தியமூர்த்தி மற்றும் போலீசார் ரோந்து பணியில் சென்றனர். அப்போது திருப்புத்தூர் அருகே கண்டரமாணிக்கம் ரோட்டில் மருதம் பிள்ளையார் கோயில் அருகே வந்த வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தனர்.

சரக்கு வேனில் 50 சாக்கு மூட்டைகளில் மணல்கள் இருந்தது தெரியவந்தது. இதனையடுத்து வேனில் வந்தவர்களை விசாரித்த போது, அவர்கள் திருப்புத்தூர் அருகே மணக்குடியைச் சேர்ந்த சின்னக்கண்ணு மகன் அன்பழகன்(40), நையினார்பட்டியை சேர்ந்த மதிவாணன்(25), சின்னையா மகன் கருப்பையா(45) என்பதும் இவர்கள் மருதம் பிள்ளையார் கோயில் பின்புறம் உள்ள விருச்சுழி ஆற்றில் சாக்கு முட்டையில் மணல் திருடியது தெரியவந்தது. இதனையடுத்து போலீசார் அவர்களை திருக்கோஷ்டியூர் காவல் நிலையம் அழைத்துச் சென்று மூன்று பேர் மீதும் வழக்குப்பதிந்து கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் 50 சாக்கு மூட்டை மணல்கள் மற்றும் வேனை பறிமுதல் செய்தனர்.

உள்ளாட்சி பணியாளர்கள் சிவகங்கையில் போராட்டம்

▶ சிவகங்கை மாவட்ட தொழிலாளர் நல அலுவலகம் முன்பு தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை தொழிலாளர் சங்கம் சார்பில் காத்திருக்கும் போராட்டம் நடைபெற்றது.

சிவகங்கை, ஜூலை 11: சிவகங்கை தொழிலாளர் நலத்துறை அலுவலகம் முன் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை தொழிலாளர் சங்கம் சார்பில் காத்திருப்பு போராட்டம் நடைபெற்றது. கிராம உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படை பணியாளர்களாக பணிபுரியும் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் வழங்க வேண்டும் என வலியுறுத்தி இப்போராட்டம் நடைபெற்றது.

மாவட்ட நிர்வாகிகள் பீட்டர், ஆரோக்கிய பல்த்தசார், விஜயபாண்டியன் தலைமை வகித்தனர். மாநில நிர்வாகிகள் துரைராஜ், பாண்டி மீனாள், வீராம்பாள், ராஜேந்திரன் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத்தலைவர் குணசேகரன், இ.கம்யூனிஸ்ட் மாவட்ட செயலாளர் சாத்தையா, மாநில துணைத்தலைவர் ராமச்சந்திரன், இ.கம்யூனிஸ்ட் நகர் செயலாளர் மருது, காஞ்சிரங்கால் ஊராட்சி மன்றத்தலைவர் மணிமுத்து கோரிக்கைகளை விளக்கி பேசினர். நிர்வாகிகள் ராஜா, மஞ்சுளா, முத்துராமலிங்கம், ஆறுமுகம், ஆரோக்கியசாமி, ராயப்பன் மற்றும் உள்ளாட்சி தொழிலாளர்கள் கலந்துகொண்டனர்.

போதை தடுப்பு விழிப்புணர்வு

▶ போதை தடுப்பு விழிப்புணர்வு பிரசாரம் சிவகங்கையில் துவங்கி காரைக்குடிக்கு வந்தடைந்தது. இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

வேலை வாய்ப்பற்றோருக்கு

உதவித்தொகை பெற விண்ணப்பம் வழங்கல்

சிவகங்கை, ஜூலை 11: சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, படித்து முடித்து வேலை வாய்ப்பில்லாமல் இருப்பவர்களுக்கு அரசு சார்பில் வேலை வாய்ப்பற்றோர் உதவித்தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 10ம் வகுப்பில் தோல்வி அடைந்தவர்களுக்கு ரூ.200, 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.300, பிளஸ்2 தேர்ச்சி அடைந்தவர்களுக்கு ரூ.400, பட்டதாரி, முதுகலை பட்டதாரிகளுக்கு ரூ.600 மாதந்தோறும் வழங்கப்படுகிறது.

மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, பதிவினை புதுப்பித்து வருபவர்கள் குறைந்தபட்சம் ஐந்தாண்டுகளுக்கு மேல் வேலை வாய்ப்பு அலுவலக உயிர்பதிவேடுகளில் காத்திருப்பவராக இருக்கவேண்டும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் எனில் 45வயதுக்குமிகாமலும், மற்ற பிரிவினர் 40வயதுக்கு மிகாமலும் இருக்கவேண்டும். மனுதாரரின் ஆண்டு வருமானம் ரூ.72ஆயிரத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

முற்றிலும் வேலையில்லாதவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே வேறு எந்த நிதி உதவியும் பெறுபவர் மற்றும் இதே திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெற்றவர்கள் விண்ணப்பிக்க கூடாது. கல்வி நிலையங்கள் செல்லும் மாணவ, மாணவிகளாக இருத்தல் கூடாது. (தொலை தூரக்கல்வி மற்றும் அஞ்சல் வழிக்கல்விக்கும் மனுதாரர்களுக்கு இது பொருந்தாது) நடப்பு காலாண்டிற்கு சுய உறுதி மொழி ஆவணம் சமர்ப்பிக்க வேண்டியவர்கள் தங்களது வங்கி பாஸ்புக்கை தற்போதைய தேதி வரை குறிப்புகள் பதிவு செய்து, படிவத்தை பூர்த்தி செய்து வழங்க வேண்டும். தகுதியுடையோர், அனைத்து கல்வி சான்றிதழ், வேலைவாய்ப்பு அலுவலக பதிவு அட்டையுடன் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு நேரில் சென்று விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளலாம். உதவித்தொகை பெறுபவர்களின் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு ரத்து செய்யப்படமாட்டாது. இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாலைக் கிராமத்தில்

மாணிக்கவாசகர் குருபூஜை விழா

இளையான்குடி, ஜூலை 11: இளையான்குடி அருகே சாலைக்கிராமத்தில் மாணிக்கவாசகர் குருபூஜை விழா நடைபெற்றது. சாலைக்கிராமம் வரகுனேஸ்வரர் கோயிலில் அம்மையப்பர் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் நடைபெற்ற விழாவில், சிவனடியார்கள் மற்றும் சிவாச்சாரியார்கள் புடைசூழ பக்தி பாமாலை, திருவாசகம், விநாயகர் அகவல் உள்ளிட்ட பாடல்கள் பாடி மாணிக்கவாசகருக்கு பால், பஞ்சாமிர்தம், தேன், இளநீர், மஞ்சள் ஆகிய சிறப்பு அபிஷேகம் மற்றும் அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை நடைபெற்றது.

▶ சாலைக் கிராமத்தில் நடைபெற்ற மாணிக்கவாசகர் குருபூஜை விழாவை முன்னிட்டு சிவாச்சாரியார்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

விழாவில் சாலைக்கிராமம், வடக்கு சாலைக்கிராமம், குயவர்பாளையம், அய்யம்பட்டி, பிச்சங்குறிச்சி, கலைநகர், வலசைக்காடு, முத்துப்பட்டிணம், முத்துராமலிங்கபுரம், தெற்கு சமுத்திரம் ஆகிய கிராம மக்கள் கலந்து கொண்டு மாணிக்கவாசகரின் தரிசனம் மற்றும் அருள் பெற்றுச் சென்றனர்.

மாலை 5 மணியளவில் கோபிச்செட்டிப்பாளையம் திருஞான சம்பந்தர் திருமணம் சிலாங்கூர் தேசிக சுவாமிகள், வேப்பூர் திருநாவுக்கரசர் திருமணம் சிவ தங்கதுரை சுவாமிகள் ஆகியோருக்கு ஆர்எஸ். மங்கலம் விலக்கு முதல் வரகுனேஸ்வரர் கோயில் வரை வரவேற்பு பேரணி நடைபெற்றது.

பின்னர் ஆன்மீக சொற்பொழிவு நடைபெற்றது. பொதுமக்கள் மற்றும் பக்தர்களின் வசதிக்காக அன்னதான நிகழ்ச்சி நடைபெற்றது.

நிர்வாகிகள் கூட்டம்

சிவகங்கை, ஜூலை 11: சிவகங்கையில் ஏஐடியுசி நகர் ஆட்டோ சங்க நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. நகர செயலாளர் பாண்டி தலைமை வகித்தார். இ.கம்யூனிஸ்ட் நகர செயலாளர் மருது, ஆட்டோ சங்க மாவட்ட செயலாளர் சகாயம், நகரத் தலைவர் கண்ணன், ஆட்டோ சங்க நிர்வாகிகள் ராஜபாண்டி அருண்குமார், ஈஸ்வரன், நாகராஜ், கருப்புச்சாமி, குமார், பாபுஜி, ஆண்டிச்சாமி கலந்து கொண்டனர்.

சிவகங்கையில் மதுரை ரோட்டில் உள்ள தனியார் பள்ளிகளின் முன்பு காலை மற்றும் மாலை பள்ளி மாணவர்கள் சாலையை கடக்கும் போது அங்கு போலீசார் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அண்ணாமலை நகர், வாணியங்குடி, முத்துப்பட்டி ஆகிய பகுதிகளில் புறக்காவல் நிலையங்கள் அமைக்க வேண்டும் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சட்டங்களை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

▶ சிவகங்கை ரயில்வே ஸ்டேசன் முன்பு வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சிவகங்கை, ஜூலை 11: சிவகங்கை ரயில்வே ஸ்டேசன் முன்பு வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஒன்றிய அரசின் ஜனநாயக விரோத மூன்று குற்றவியல் சட்டங்களை எதிர்த்தும், அவைகளை உடனடியாக திரும்பப்பெற வேண்டும் என வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சிவகங்கை வழக்கறிஞர்கள் சங்க செயலாளர் சித்திரைச்சாமி தலைமை வகித்தார். இணை செயலாளர் நிருபன் சக்கரவர்த்தி, வல்மீகநாதன் முன்னிலை வகித்தனர். வழக்கறிஞர்கள் தங்கபாண்டியன், ராம்பிரபாகர், மகேந்திரகுமார், தீபன் சக்கரவர்த்தி, மருது, மதி, நவநீதன், பில்லூர்கார்த்தி மற்றும் ஏராளமான வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர். போராட்டத்தையொட்டி ரயில்வே ஸ்டேசன் பகுதியில் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

திருப்புத்தூரில்

அரசு மருத்துவமனையில் குடும்ப நல வார விழா

திருப்புத்தூர், ஜூலை 11: திருப்புத்தூர் மருதுபாண்டியர் அரசு மருத்துவமனையில் குடும்ப நல வார விழா கொண்டாடப்பட்டது. மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, தலைமை மருத்துவ அலுவலர் ஆமினாபாதம் தலைமை வகித்தார். மருத்துவர் சுபலெட்சுமி முன்னிலை வகித்தார். இதில் குடும்பநல முறைகள் பற்றியும் குறிப்பாக இளம் வயது திருமணம் சட்டப்படி குற்றம் என்றும், கர்ப்பிணிப் பெண்கள் சத்தான உணவு, கருவில் வளரும் குழந்தைகளின் ஆரோக்கியம், குறித்தும் முறைப்படியான பரிசோதனைகள் அந்தந்த காலக்கட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். குடும்ப கட்டுப்பாடு குறித்து மக்களிடையே விழிப்புணர்வு வரவேண்டும் எனவும் எடுத்துக்கூறப்பட்டது. தொடர்ந்து ஆண்களுக்கான குடும்ப நல முறைகள் பற்றியும் ஆலோசனைகள் குறித்தும் குடும்பநல ஆலோசகர் லெட்சுமி விளக்கிக் கூறினார். இதில் துணை செவிலியர் ஹேமலதா மற்றும் செவிலியர்கள் பணியாளர்கள் பொது மக்கள் கலந்து கொண்டனர். தலைமை செவிலியர் அமுதா நன்றி கூறினார்.

நான் முதல்வன் திட்டத்தில்

6,936 மாணவர்கள் பயன் பெற்றனர்

சிவகங்கை, ஜூலை 11: சிவகங்கை மாவட்டத்தில் 6ஆயிரத்து 936 மாணவ,மாணவிகள் நான் முதல்வன் திட்டத்தில் பயனடைந்துள்ளனர்.

தமிழ்நாடு அரசு சார்பில் பள்ளிக்கல்வி மற்றும் உயர் கல்வித்துறையில் எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கல்வி வளர்ச்சி பெற்ற மாநிலம் அனைத்து வளமும் பெற்ற மாநிலமாக கருதப்படும் என்ற அடிப்படையில், எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. அத்திட்டங்கள் மட்டுமின்றி, புதிதாகவும், தொலைநோக்கு பார்வையுடனும் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டும் பள்ளி, கல்லூரி மாணவ,மாணவிகள் மற்றும் இளைஞர்கள் படிப்பில் மட்டுமல்லாது, அவர்களது தனித்திறமைகளை அடையாளம் கண்டு அதனை ஊக்குவிக்கும் வகையில் நாள் முதல்வன் என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் மூலம் 28 லட்சம் கல்லூரி, மாணவ,மாணவிகளுக்கு பல்வேறு திறன் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் தமிழகத்தில் ஆண்டுக்கு 10லட்சம் இளைஞர்களைப் படிப்பில், அறிவில், சிந்தனையில், ஆற்றலில், திறமையில் சிறந்து விளங்கிட வேண்டும் என்பதேயாகும். குறிப்பாக, மாணவ,மாணவிகள் தனித்திறமைகளை அடையாளம் கண்டு, அதனை மேலும் ஊக்குவிப்பதோடு, அவர்கள் அடுத்தடுத்து என்ன படிக்கலாம், எங்கு படிக்கலாம், எப்படி படிக்கலாம் என்று வழிகாட்டிடவும் வழிவகை செய்கிறது. உயர்கல்வி நிறுவனங்கள், உயர்கல்வி படிப்புகள் மற்றும் வங்கிக் கடன்கள் சார்பான அரங்குகள் அமைக்கப்படுகிறது.

உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் பற்றிய விபரங்களுடன், துறைசார் வல்லுநர்கள், பேராசிரியர்கள், மருத்துவர்கள் மற்றும் வெற்றி பெற்ற சாதனையாளர்கள் பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம், கலைப்படிப்புகள், அறிவியல் படிப்புகள் மற்றும் ஊடகவியல் சார்ந்த படிப்புகள் என பல்வேறு படிப்புகளில் உள்ள உட்பிரிவுகள், அவற்றிற்கான வேலை வாய்ப்புகள் குறித்து இத்திட்ட நிகழ்ச்சிகளில் வழிகாட்டப்படுகிறது. சிவகங்கை மாவட்டத்தில் இத்திட்டத்தின் மூலம் இதுவரை 6ஆயிரத்து 936 மாணவ,மாணவிகள் பயனடைந்துள்ளனர்.

மாணவ,மாணவிகள் கூறியதாவது: இத்திட்டத்தின் மூலம் படிப்பு சார்ந்த தொழில்நுட்ப படிப்பிற்கான பயிற்சிகளும் சம்பந்தப்பட்ட தொழில் நிறுவனங்கள் வாயிலாக வழங்கப்படுகின்றன. நாங்கள் விரும்புகின்ற தொழில் பிரிவுகளை தேர்வு செய்து படிப்பதற்கும், அதற்கு தேவையான அனைத்து வழிமுறைகளும், பயிற்சிக்கான சான்றிதழ்களும் தொழில் நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளன. இதனால் எதிர்காலத்தில் என்ன படித்தால் முழுமையான பயன் என்பதில் தெளிவு கிடைத்துள்ளது என்றனர்.

மதகுபட்டியில் இன்று மின்தடை

சிவகங்கை, ஜூலை 11: மதகுபட்டியில் இன்று மின் விநியோகம் நிறுத்தப்பட உள்ளது. மதகுபட்டி துணை மின் நிலையத்தில் பராமரிப்பு பணிகள் நடைபெறுவதையொட்டி மதகுபட்டி, அலவாக்கோட்டை, சிங்கினிப்பட்டி, அம்மச்சிப்பட்டி, நாமனூர், உசிலம்பட்டி, அழகமானேரி, திருமலை, கல்லராதினிப்பட்டி, வீரப்பட்டி, கீழப்பூங்குடி, பிரவலூர், பேரணிப்பட்டி, ஒக்கூர், கீழமங்கலம், காடனேரி, அம்மன்பட்டி, நகரம்பட்டி.

காளையார்மங்கலம், கருங்காபட்டி, கருங்காலக்குடி, அண்ணாநகர், பர்மா காலனி, நாலுகோட்டை, அரளிக்கோட்டை, ஜமின்தார்பட்டி, ஆவத்தாரன்பட்டி, கணேசபுரம், ஏரியூர் உட்பட இந்த துணை மின்நிலையத்தில் இருந்து மின் விநியோகம் செய்யப்படும் பகுதிகளில் இன்று காலை 10 மணியிலிருந்து மாலை 5மணி வரை மின் விநியோகம் நிறுத்தப்பட உள்ளது.

TATA

டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013.
கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024.

அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு
(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 8(6)ன் படி 9(1) கீழ்)
கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை மின்–ஏலம் அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப–கடன்தாரர், அல்லது அவர்தம் சட்டப்பூர்வ வாரிசுகள்/பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (டிசிஎச்எல்) வசம் அடமானம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, கீழே குறிப்பிட்ட கடன்தாரர் மற்றும் உப–கடன்தாரர்களிடமிருந்து நிலுவைத்தொகைகளை மீட்பதற்காக 'உள்ளது உள்ளவிடத்தில்' & 'உள்ளது உள்ளவாறு' மேலும் 'உள்ளது எதுவோ அது' அடிப்படையில் 29–07–2024 நாளில் விற்பனை செய்யப்பட உள்ளது. நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்தி வைப்பு/ விற்பனை நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்கூறிய 29–07–2024 நாளில் பிற்பகல் 2.00 மணிக்கு மின்–ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024 இடத்தில் **27–07–2024 அன்று மாலை 5 மணி வரை அல்லது அதற்கு முன்பாக** டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
கடனீட்டுச் சொத்து/ அசையாச் சொத்து விற்பனை இங்கே கீழே விவரிக்கப்பட்ட குறு விவரங்களின்படி 'உள்ளது உள்ளவிடத்தில் நிபந்தனையில்' ஆனதாகும்:

வ. எண்	கடன் கணக்கு எண் மற்றும் கிளை	கடன்தாரர்(கள்) / உப–கடன்தாரர்(கள்) சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி/ ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீன வகை
4.	10026992 & 10064994	திரு. முருகன் M திருமதி. பஞ்சவர்ணம் M	கடன் கணக்கு எண்: 10026992 கீழ் ரூ.6,17,791/– நிலுவை மற்றும் உங்களால் செலுத்தப்பட வேண்டியதாக உள்ளது. மேலும் கடன் கணக்கு எண்: 10064994 கீழ் தொகை ரூ.7,32,467/– நிலுவை மற்றும் உங்களால் செலுத்தப்பட வேண்டியதாக உள்ளது) மொத்தத்தில் ரூ.13,50,258/– & 16–11–2019	Rs. 17,65,000/- (ரூபாய் பதினேழு லட்சத்து அறுபத்தி ஐந்தாயிரம் மட்டும்)	Rs. 1,76,500/- (ரூபாய் ஒரு லட்சத்து எழுபத்தி ஆறாயிரத்து ஐநூறு மட்டும்)	கையக

அசையாச் சொத்தின் விவரம்: அனைத்து துண்டு மற்றும் பகுதியும் சிவகங்கை மாவட்டம், சிவகங்கை பதிவு மாவட்டம், சிவகங்கை இணை 2 சார் பதிவாளர் அலுவலகம், சிவகங்கை வட்டம், கொட்டக்குடி குழு, கொட்டக்குடி கீழ்பாதி கிராமத்தில் அமைந்துள்ள, சர்வே எண். 101/1பகுதி, பரப்பளவு 1026 சதுர அடி வீட்டு மனையின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும் அடங்கிய சொத்து. இதில் பின்வரும் எல்லைகளுக்குள்: வடக்கில்: 20 அடி தெற்கு வடக்கு கிழக்கு மேற்கு பொது பாதை, தெற்கில்: ராமசாமி நகர் மனை, கிழக்கில்: வீட்டு மனை எண்.19சி, மேற்கில்: கொட்டக்குடி ஆறுமுகம் வீடு, அளவீடு: கிழக்கு மேற்காக ஜாதியடி வடக்கு பக்கம்: 30 அடி, கிழக்கு மேற்காக ஜாதியடி தெற்கு பக்கம்: 24 அடி, தெற்கு வடக்காக ஜாதியடி கிழக்கு பக்கம்: 37 ½ அடி, தெற்கு வடக்காக ஜாதியடி மேற்கு பக்கம்: 38 ½ அடி. மொத்தம் 1026 ச.அடி. இதில் சர்வே எண். 101/1, என்.எச்.ஏ.12.5 இல் உள்ள 0.31 சென்ட்களில் வடக்குப் பக்கத்தில் உள்ள 8 ¼ சென்ட்கள் நிலத்தில் மீதமுள்ள என்.ஏ. 0.22 ¾ சென்ட்களுடன் சர்வே எண். 101/1A, என்.ஏ.0.04.0 இல் 0.10 சென்ட்கள் மற்றும் சர்வே எண். 101/1B, என்.ஏ.0.08.5 இந்த என்.ஏ.0.21 சென்ட்கள் பட்டா எண்.12, மற்றும் 275 உடன் வழக்கமான பாதை வழிகள், பொது சாலை வசதிகள், பொது லே அவுட் உரிமைகளுடன் ஏனையவை.

ஏலத்தில், பொதுவாகப் பொதுமக்கள் தனிப்பட்டு தங்கள் ஏலப்புள்ளி(களை) சமர்ப்பிக்க வரவேற்கப்படுகின்றனர். கடன்தாரர்(கள்)/உப–கடன்தாரர் (கள்) இந்த அறிவிப்பு பிரசுரமான தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் மேற்கொண்டு வட்டியுடன் மொத்த நிலுவைகளைச் செலுத்த இதன்மூலம் கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது, தவறினால் அசையாச் சொத்து அட்டவணைப்படி விற்பனை செய்யப்படும். ஏலத்தேதிக்கு முன்பாக மேற்கூறிய நிலுவைத்தொகை, வட்டி மற்றும் செலவுகளுடன் (விற்பனை செலவு உட்பட) அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் வழங்கப்பட்டால் அல்லது இவ்வித கடனீட்டுக் கடன்தொகை, வட்டி மற்றும் செலவுகள் செலுத்தப்பட்டுள்ளன என்று அவருடையத் திருப்திக்குரியவாறு சான்று அளிக்கப்பட்டால் மின்னணு ஏலம் நிறுத்தப்படும்.
இந்த விற்பனைத் தொடர்பாக ஏதேனும் பணியைச் செயல்படுத்திக் கொண்டிருக்கும் அலுவலர் அல்லது பிற நபர், விற்கப்படும் அசையாச் சொத்தில் ஏதேனும் உரிமையைக் கைப்பற்ற அல்லது கைப்பற்ற முயற்சிக்க நேரடியாக அல்லது மறைமுகமாக ஏலப்புள்ளி அளிக்கலாகாது.
விற்பனையானது கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இல் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் பின்வரும் மேற்கொண்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டது ஆகும்:
குறிப்பு: மின்–ஏலம் ஆனது http://bankauctions.in/ இணைய முகப்பு மூலம் 29–07–2024 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் 3.00 மணிக்குள் தலா 10 நிமிடங்கள் வரையறுக்கப்பட்ட நீட்டிப்புடன் நடைபெறும்.
விதிமுறைகள் மற்றும் நிபந்தனை:
1. இங்கே கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் கீழே கையொப்பமிட்டவருக்கு நன்கு தெரிந்த வரையில் தெரிவிக்கப்பட்டுள்ளன, ஆனால் கீழே கையொப்பமிட்டவர் இந்த அறிவிப்பில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடுதலுக்கு பொறுப்பேற்க மாட்டார். ஏலப்புள்ளி தொகை, அல்லது ஏலதாரரிடம் ஏதேனும் பூசல் எழுமானால், அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமைக்கு உட்பட்டு அசையாச் சொத்து மீண்டும் ஒருமுறை ஏலத்திற்கு வைக்கப்படும். 2. அசையாச் சொத்து நிர்ணய விலைக்குக் குறைவாக விற்பனை செய்யப்படமாட்டாது. 3. ஏலம் உயர்த்தும் தொகை ஆவது: **ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)** 4. சொத்து கொள்முதலுக்காக சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஏலப்புள்ளிகளும் கிளை முகவரியில் மாற்றத்தக்க வகையில் "டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிட்." பெயரிலான கேட்பு வரைவோலை மூலம் மேற்குறிப்பிட்டவாறான முன்வைப்புத்தொகையால் இணைக்கப்பட்டிருக்கப்பட வேண்டும். வெற்றிபெறாத ஏலதாரர்களுக்கு ஏலம் முடிந்த பிறகு கேட்பு வரைவோலைகள் திருப்பியளிக்கப்படும். NEFT/RTGS/IMPS வழியே முன்வைப்புத்தொகைச் செலுத்துவதற்கு, அதிகாரப்பூர்வ அதிகாரியை தொடர்பு கொள்ளவும். 5. உயர்ந்தபட்ச ஏலதாரர், ஏலப்புள்ளி அளிக்க அவர் எப்போதும் சட்டப்பூர்வத் தகுதியடைந்தவர் மேலும் ஏலப்புள்ளித் தொகை நிர்ணய விலைக்குக் குறைவில்லாதது என்பதைப் பொறுத்து வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்படுவார். அளிக்கப்பட்ட விலை பற்றாக்குறை என தெளிவாகக் காணப்படுகையில் உயர்ந்தபட்ச ஏலப்புள்ளியை ஏற்க மறுப்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும். 6. பதிவுக் காரணங்களுக்காக, விற்பனை ஒத்தி வைத்தல்/ நிறுத்துதல் என்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும். 7. **முன் அனுமதியில் 23–07–2024 அன்று காலை 11 மணி முதல் மாலை 5.00 மணிக்குள்** அசையாச் சொத்தினை பார்வையிடலாம். 8. வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்பட்ட நபர், இவ்வித அறிவிப்புக்குப் பிறகு உடனடியாக, 24 மணி நேரத்திற்குள் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் முன்வைப்புத்தொகை உள்ளடக்கமாக கொள்முதல் பணம்/ ஏலப்புள்ளித் தொகையின் இருபத்தைந்து சதவீதத்தைச் செலுத்த வேண்டும் மேலும் இவ்விதம் செலுத்தத் தவறினால், சொத்து உடனடியாக புதிதாக ஏலத்திற்கு வைக்கப்படும்/தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும். 9. மேற்கூறியவாறு முதற்கட்டத் தொகைச் செலுத்தப்பட்டு விட்டால், செலுத்த வேண்டிய கொள்முதல் பணத்தின் மீதித்தொகையானது சொத்து விற்பனை உறுதியானத் தேதியிலிருந்து, இந்த நாளைத்